**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KANNIYAKUMARI AT NAGERCOIL.**

16.10.2025

O.S. No. 276/2022

D.W. 1 திரு. ஆனந்த்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) -**

நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்தது என்றால் நான் தயார் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரிந்த சங்கதிகளா அல்லது கேள்விபட்ட சங்கதிகளா என்றால் ஆவணங்களை படித்து பார்த்து சங்கதிகள் தயார் செய்தேன். இந்த வழக்கில் வாதிகளின் சாட்சியத்திற்கு பிறகு பதிலுரையில் இல்லாத சங்கதிகள் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரயில்ல. எங்களுடைய பதிலுரையிலோ அல்லது கூடுதல் பதிலுரையிலோ சுப்பையா பிள்ளையை பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, சொல்லப்பட்டுள்ளது. சாட்சியிடம் பதிலுரையையும், கூடுதல் பதிலுரையையும் காட்டி கேட்டபோது படித்து பார்த்துவிட்டு சுப்பையா பிள்ளை பற்றி சொல்லப்படவில்லை என கூறுகிறார். சுப்பையா பிள்ளையை பற்றி என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள அனுமானத்திற்கு ஆதரவாக ஆவண சாட்சியம் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கேள்விப்பட்டதை வைத்து

கூறியுள்ளேன். வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிவு செய்த ஆவணங்கள் துறை ரீதியாகவோ அல்லது நீதிமன்றம் மூலமாகவோ ரத்தோ, மாற்றமோ செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, ஆவணங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. அவை ரத்து செய்யப்பட்டதா அல்லது மாற்றம் செய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் வாதியுடைய வழக்கு மற்றும் வாதி தாக்கல் செய்த ஆவணங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வாதி தாக்கல் செய்த வா.சா.ஆ. 5, 6, 7 மற்றும் 9 ஆவணங்கள் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டஆவணங்கள் என்றால் சரிதான். இந்த பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எங்களிடம் கிடைத்த பிறகு சம்பந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அந்த பதிவை உறுதி செய்து கொண்டோமா என்றால் இல்லை. அவ்வாறு உறுதி செய்யாததற்கு எதாவது காரணம் உண்டா என்றால் அந்த ஆவணங்கள் எங்களுடைய பார்வைக்கு வரவில்லை. இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு இந்த ஆவணங்கள் எங்கள் கைக்கு கிடைத்த பிறகாவது விசாரித்தோமா என்றால் இல்லை. இந்த ஆவணங்கள் எங்கள் கைக்கு கிடைத்த பிறகாவது அவ்வாறு சார் பதிவாளர் அலுவலகத்தில் சென்று விசாரித்தோமா என்றால் பட்டா மற்றும் இதர ஆவணங்கள் கோவில் பெயரில் உள்ளது. அதனால் போய் விசாரிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அந்த ஆவணங்களின் உண்மைதன்மை குறித்து எங்களுக்கு எந்தவித சந்தேகமும் ஏற்படாததால்தான் அது குறித்து நாங்கள் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இதற்கு முன்பு இந்த வாதிக்கும், எங்கள் துறைக்கும் இடையே நடந்த இதர வழக்குகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால்

தெரியும். இதற்கு முன்னர் நடந்த வழக்கில் எங்கள் துறை சார்பாக வழக்கு நடத்திய வழக்கறிஞர் D. ஹரி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு ஏற்பட்ட பிறகு அவரை சந்தித்து நாங்கள் ஆவணங்கள் மற்றும் விவரங்கள் கேட்கவில்லையா என்றால் கேட்கவில்லை. அசல் வழக்கு எண். 537/2002 நீதிமன்றத்திலும் M.P. 2/2012, 2 ஆம் எதிர்மனுதாரர் முன்பு வாதியால் தாக்கல் செய்யப்பட்டு, அந்த வழக்குகளில் மலையாளஆவணங்களும் அவற்றின் மொழி மாற்றங்களும் தாக்கல் செய்யப்பட்டு, அதை எங்கள் துறையினரால் ஆட்சேபனை செய்யப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணங்கள் சரியாக மொழி மாற்றம் செய்யப்படவில்லை. எனக்கு மலையாளம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1, 2 மற்றும் 3 ஆவணங்கள் மலையாள மொழியில் இருக்கும்போது அது சரியாக மொழி மாற்றம் செய்யப்படவில்லை என்ற விவரம் எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் கேட்டு தெரிந்து கொண்டேன். எதை வைத்து அவ்வாறு சரியாக மொழி மாற்றம் செய்யப்படவில்லை என்று சொல்கிறேன் என்றால் கேட்டு தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் என்ன மொழி மாற்றம் சரியாக செய்யப்படவில்லை என்றால் சாட்சி மொழி மாற்றத்தை படித்து விட்டு கொச்சம்மையின் பெயரில் பதிப்பதற்காக எழுதி அனுப்பியிருப்பதாகதான் அந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளதாகவும், வாதி கொச்சம்மையின் பெயரில் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டதாக தவறாக கூறுகிறார் என்றும் விளக்குகிறார். அதனால் மொழி மாற்றத்தில் எந்த பிரச்சினையும் இல்லை. அவ்வாறு மொழி மாற்றம்

செய்யப்பட்ட விவரத்தை வாதி தவறாக கூறுகிறார் என சொல்கிறேனா என்றால் மொழி மாற்றம் செய்ததே சரியில்லை என்றுதான் என்னிடம் சொன்னார்கள். அந்த மொழி மாற்றம் சரியில்லாத பட்சத்தில் எங்கள் தரப்பில் அந்த ஆவணங்களின் மொழி மாற்றம் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் மொழி மாற்றத்தில் தவறு இருப்பதாக எங்களுடைய பதிலுரையில் கூட சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களுடைய பதிலுரையை தயார் செய்யும்போது நான் அங்கு இருந்தேனா என்றால் இல்லை. எங்களுடைய பதிலுரையில் யார் தயாரித்தது என்ற விவரம் உள்ளதா என்றால் உள்ளது. R. ஞானசேகரன், த/பெ. ராமசாமி, இணை ஆணையர்/செயல் அதிகாரி, கன்னியாகுமரி மாவட்டம், இந்து அறநிலைய துறை தயார் செய்ததாக உள்ளது. தற்போது அருள்மிகு பகவதியம்மன் கோவில் செயல் அதிகாரி இருக்கிறாரா என்றால் கன்னியாகுமரியில் உள்ள 490 கோவில்களுக்கு சேர்த்து இணை ஆணையர் / செயல் அதிகாரி இருக்கிறார். ஒவ்வொரு பெரிய கோவிலுக்கும் நிர்வாகம் செய்ய Manager ஒருவர் இருப்பார். சிறிய கோவில்களாக இருந்தால் ஒவ்வொரு கோவிலுக்கும் ஒரு ஸ்ரீகாரியம் இருப்பார். இந்த பதிலுரையை தாக்கல் செய்தவர் எனக்கு உயர் அதிகாரி என்றால் சரிதான். அந்த பதிலுரையில் அந்த கோவிலுக்கு தனியாக செயல் அதிகாரி கிடையாது என்றும் அந்த கோவிலின் நிர்வாகத்திற்கு Manager ஒருவர் இருக்கிறார் என்றும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கோவிலில் கட்டுச்சோறு சம்பளமாக கொடுக்கப்பட்டது என்றோ விறகுகள் சேகரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது என்றோ எங்களுடைய பதிலுரையில்

சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கட்டுச்சோறு சம்பளமாக கொடுக்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, சொல்லவில்லை. நாங்கள் சரி பார்த்த ஆவணங்களில் கோவிலில் கட்டுச்சோறு சம்பளமாக கொடுக்கப்பட்டது என்று காட்டும் ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஆனால் வழக்கமாக அவ்வாறு கட்டுச்சோறுதான் சம்பளமாக கொடுக்கப்படும். அவ்வாறு கட்டுச்சோறு சம்பளமாக கொடுக்கப்பட்டிருந்தால் எத்தனை பேருக்கு சம்பளம் கொடுக்கப்பட்டது, எவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டது, எந்த எந்த தேதியில் கொடுக்கப்பட்டது, எந்த பணிக்காக கொடுக்கப்பட்டது போன்ற விவரங்கள் கோவில் பதிவேட்டில் குறிக்கப்பட்டு வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்வதற்கு முன்பு அந்த ஆவணங்களை பார்த்தோமா என்றால் இல்லை. இந்த ஆவணங்கள் எங்களிடம் இருக்கிறதா என்று தெரியுமா என்றால் இருக்கிறது. அந்த ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் சாட்சியங்களாக தாக்கல் செய்ய முடியுமா என்றால் பார்த்துதான் சொல்ல முடியும். 2012 ல் வா.சா.ஆ. 25 ஆவணம் வழங்கும்போது நான் பணியில் இருந்தேனா என்றால் நான் கோவில் Manager ஆக அப்போது இல்லை. நான் இந்த மாவட்டத்தை சேர்ந்தவனா என்றால் இல்லை. நான் இந்த மாவட்டத்திற்கு எந்த வருடம் வந்தேன் என்றால் 2022 ஆம் வருடம் வந்தேன். எனக்கு தெரிய எங்கள் கோவிலில் தானிய களஞ்சியமோ, விறகு புரையோ இருந்ததா என்றால் நான் பார்த்ததில்லை. எனக்கு முன்னர் வேலை செய்தவர்கள் இருந்ததாக சொல்லியுள்ளார்கள். இந்த விவரம் எல்லாம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும்

கேள்விப்பட்டதைதான் சொல்கிறேன் என்றால் சரிதான். முசௌரி பங்களா தெரியுமா என்றால் தெரியும். நெல் கணக்கு, சாப்பாடு போடும் கணக்கு போன்றவை எழுதும் ஒரு இடம். முசௌரி பங்களா என்பது ராஜாங்க காலத்தில் யாருடையது என்றால் கோவிலுடையது. நான் அவ்வாறு சொல்வதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் பட்டா, சிட்டா உள்ளது. முசௌரி பங்களா என்பது ராஜாக்கள் தங்கும் விடுதி என்றால் சரியல்ல. பகவதியம்மன் திருக்கோவிலுடைய தோற்றம், வரலாறு, மராமத்து செய்யப்பட்ட விவரம், சொத்துக்கள் குறித்த ஆவணங்கள் எங்களிடம் உள்ளதா என்றால் உள்ளது. வருவாய்த் துறை ஆவணங்களாக நான் சொன்ன பட்டா, சிட்டா தவிர மேற்சொன்ன ஆவணங்களில் இந்த தாவா சொத்து குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த வருடத்திலிருந்து அவ்வாறு அந்த சொத்து மேற்சொன்ன ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 50 வருடங்களாகாவது குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களின் பெயர் சொல்ல முடியுமா என்றால 1 முதல் 15 Register களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். பகவதியம்மன் கோவிலுடைய நிர்வாகம், வரவு, செலவு திட்டங்கள் கொண்ட பதிவேடுகளை எந்த வருடத்திலிருந்து நான் சரிபார்த்தேன் என்றால் 2022 லிருந்து சரிபார்த்தேன். 1 முதல் 15 Register களை நான் எந்த வருடத்திலிருந்து பார்த்துள்ளேன் என்றால் 1980 க்கு முன்னர் உள்ள Register களையும் பார்த்துள்ளேன். நான் பார்த்துள்ளதாக சொல்லும் Register கள் தற்போது என்னுடைய பொறுப்பில்தான் உள்ளது என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் அவற்றை தாக்கல் செய்ய முடியுமா

என்றால் முடியும். ஊட்டுப்புரை என்றால் சாப்பிடும் இடம். கன்னியாகுமரி பகவதியம்மன் கோவிலில் எந்த வருடத்திலிருந்து ஊட்டுப்புரை நடத்தப்படுகிறது என்றால் ஆரம்ப காலத்திலிருந்தே நடத்தப்படுகிறது. ஆரம்ப காலம் என்றால் என்ன என்றால் இந்து சமய அறநிலைய துறையின் பொறுப்புக்கு அந்த கோவில் வருவதற்கு முன்பிலிருந்தே நடந்து வருகிறது. சம்பந்தப்பட்ட திருக்கோவில்கள் இந்து சமய அறநிலைய துறையின் கீழ் எப்போது வந்தது என்றால் 1956 ல் வந்தது. அவ்வாறு கோவில்கள் எங்களிடம் ஒப்படைத்த பிறகு கோவில் சொத்து குறித்து எப்போது சொத்து பதிவேடுகள் தயார் செய்யப்பட்டது என்றால் 1959 க்கு பிறகு தயார் செய்யப்பட்டது. 1959 க்கு பிறகு தயார் செய்யப்பட்ட பதிவேடுகளில் தாவா சொத்து விவரங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அதுதான் 1 முதல் 15 Register. 1959 ஆம் ஆண்டிற்கு பிறகு தயார் செய்யப்பட்ட 1 முதல் 15 Register களை எங்களால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அந்த Register களை வைத்துதான் தற்போதுள்ள Register கள் தயார் செய்யப்பட்டுள்ளது. அந்த வருடத்திய Register கள் தற்போது இருக்காது. 1 முதல் 15 Register கள் எந்த வருடத்தில் தொடங்கினோம் என்றால் 1980 க்கு பிறகு தொடங்கினோம். 1980 க்கு பிறகு தொடங்கிய அந்த Register களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். கோவில்களில் உள்ள சொத்துக்களை 3 வருடத்திற்கு ஒரு முறை சரி பார்த்து பதிவேடு தயார் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 10 வருடத்திற்கு ஒரு முறை சரி பார்த்து பதிவேடு தயார் செய்ய வேண்டும். முதன் முதலாக அவ்வாறு சரிபார்த்து எப்போது சொத்து பதிவேடு தயார் செய்யப்பட்டது என்றால் 1980 க்கு பிறகு தயார் செய்யப்பட்டது.

அவ்வாறு தயார் செய்யப்பட்ட சொத்து பதிவேடுகளில் ஒரு நகல் எங்கள் கோவில்களிலும், ஒரு நகல் 4 ஆம் பிரதிவாதியிடமும், ஒரு நகல் 3 ஆம் பிரதிவாதியிடமும், ஒரு நகல் 2 ஆம் பிரதிவாதியிடமும், கடைசியாக முதல் பிரதிவாதியிடமும் இருக்கும் என்றால் சரிதான். ஆணையர் அந்த விவரங்களை சரிபார்த்து விட்டு அவர் அலுவலத்தில் மேற்குறிப்பு செய்யப்பட்டு, கோவிலுக்கு திருப்பி அனுப்பப்பட்டு விடும் என்றால் சரிதான். எங்கள் நகல் 3 ஆம் பிரதிவாதியின் அலுவலகத்தில் உள்ளது. இந்த வழக்கில் 3 ஆம் பிரதிவாதியிடம் உள்ள நகலை தாக்கல் செய்ய முடியுமா என்றால் பார்த்துதான் சொல்ல முடியும். நான் அதை பார்க்கவில்லையா என்றால் பார்க்கவில்லை. கடைசியாக அவ்வாறு ஆணையர் மேற்குறிப்பிட்டு அனுப்பிய பிறகு அந்த Register களை எப்போது பார்த்தேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை, பார்த்துதான் சொல்ல முடியும். அவ்வாறு எத்தனை Register களை நான் பார்த்துள்ளேன் என்றால் நான் எதுவும் பார்க்கவில்லை. கன்னியாகுமரி பகவதியம்மன் கோவிலை சுற்றி நான்கு புறமும் உயரமான திருமதில்சுவர்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த திருமதில்சுவர்கள் எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் 1000 ஆண்டுகள் பழைமையானது. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள தாவா சொத்து திருமதில்சுவருக்கு வெளியே உள்ளது என்றால் ஆமாம். அதுதான் நான்காம் பிரகாரம். பழைய Settlement Register ன் படி இந்த தாவா சொத்து மூன்று சர்வே எண்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பழைய Settlement Register படி தாவா சொத்தின் சர்வே எண் சொல்ல முடியுமா என்றால் சர்வே எண்கள். 1/1, 1/31 மற்றும் 122.

சர்வே எண். 1/1 ல் பகவதியம்மன் கோவில் என குறிக்கப்பட்டுள்ளது. சர்வே எண். 1/31 கணக்குச்சாவடி, கோவில் தானியகளஞ்சியம், விறகுபுரை என குறிக்கப்பட்டுள்ளது. சர்வே எண். 122 முசௌரி பங்களா என குறிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று சர்வே எண்களுக்கும், 3 வேறுபட்ட பயன்பாடு குறிப்பிடப்பட்டிருக்கும்போது ரீசர்வே எண் 678/41 என எந்த அடிப்படையில் ஒன்றாக்கினார்கள் என்றால் ரீசர்வே செய்யும்போது ஒன்றாக்கினார்கள். விஸ்வ ஹிந்து கேந்திரா பயன்பாட்டின் அந்த மூன்று சொத்துக்களும் இருந்ததால் அவ்வாறு ஒரே ரீசர்வே எண் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த ஆண்டு ரீசர்வே எண் செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்தில் குறிப்பிட்டுள்ள மூன்று சர்வே எண்களும், வாதியின் பயன்பாட்டில் இருந்ததால்தான் அவ்வாறு மூன்று சொத்துக்களுக்கும் சேர்த்து ஒரே ரீசர்வே எண்கள் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. பகவதியம்மன் கோவிலுக்கு தனியாக ரீசர்வே எண் கொடுத்திருக்கிறார்களா என்றால் கொடுத்திருக்கிறார்கள். ரீசர்வே எண். 679. ரீசர்வே எண். 679 க்கான பட்டா எங்களிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். ரீசர்வே எண். 679 ல் கோவில் பரப்பளவு எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 8 ஏக்கர் 17 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தாவா சொத்திற்கான கோவிலின் உரிமையை வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில்தான் கோருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் இருக்கும் கட்டிடங்கள் எவ்வளவு வருடம் பழைமையானது என்றால் 1956 க்கு முன்னிலிருந்தே இருக்கிறது. எங்களிடம் உள்ள ஆவணங்களிலோ அல்லது

எங்களுக்கு 1956 ல் கோவிலை ஒப்படைக்கும்போது கொடுத்த ஆவணங்களிலோ அந்த கட்டிடங்கள் எப்போது கட்டப்பட்டது என காட்டும் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எங்களுடைய பதிலுரையிலும், கூடுதல் பதிலுரையிலும் அந்த கட்டிடங்கள் 100 ஆண்டு பழைமையானது என்று எதை வைத்து கூறியுள்ளோம் என்றால் தொல்பொருள் துறையினர் கொடுத்த தகவலின் பேரில் கூறியுள்ளோம். அவ்வாறு எப்போது தகவல் கொடுத்தார்கள் என்றால் கும்பாபிஷேகம் நடக்கும்போது கூறியுள்ளார்கள். கடந்த ஆறு மாதத்திற்கு முன்னர் கூட கும்பாபிஷேக வேலை தொடர்பாக பேசும்போது கூட கூறினார்கள். எப்போது அவ்வாறு தாவா சொத்தில் உள்ள கட்டிடங்களை தொல்லியல் துறையினர் வந்து பார்த்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை, ஆறு மாதம் இருக்கும். தொல்லியல் துறையினர் கொடுத்த குறிப்புரையில் அதில் தாவா சொத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் கோவிலில் உள்ள கட்டிடங்கள் என கூறியுள்ளார்கள். தொல்லியல் துறையினர் யாரும் தாவா சொத்தை பார்வையிட வில்லை என்றாலும் அவர்கள் கோவிலை பார்த்து கொடுத்த அறிக்கையிலும் தாவா சொத்திற்கும் சேர்த்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கணக்குசாவடி என்றால் என்ன என்றால் கோவில் சார்ந்த கணக்குகள், கோவிலில் உள்ள சொத்துக்களுக்கான கணக்குகள் ஆகியவற்றை பராமரிக்கும் இடம். கன்னியாகுமரி பகவதியம்மன் கோவிலுக்காக, தனியாக கணக்குசாவடி இருப்பதாக எங்கள் ஆவணங்களில் உள்ளதா என்றால் உள்ளது. எந்த ஆவணத்தில் உள்ளது, எந்த ஆண்டு உள்ளது என்றால் அது குறித்து எனக்கு குறிப்பிட்டு சொல்ல முடியாது, கோவிலில் உள்ள ஆவணங்களில் உள்ளது.

அந்த ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் நான் அந்த ஆவணங்களை பார்க்க வில்லை, எனக்கு முன்னர் வேலை செய்தவர்கள் பார்த்ததாக கூறினார், அதனால் நான் பார்த்துதான் சொல்ல முடியும். 1970 லிருந்து 1976 வரை கோவில் சொத்துக்கள் சம்பந்தமான ஆவணங்கள் யாரிடம் உள்ளது என்றால் கோவிலிலும் உள்ளது, இணை ஆணையர் / செயல் அலுவலர், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள் அலுவலகத்தில் உள்ளது. கோவிலில் உள்ள ஆவணங்கள் என் பொறுப்பில்தான் உள்ளது என்றால் சரிதான். 1970 லிருந்து 1976 வரைக்கான என் பொறுப்பில் உள்ள ஆவணங்களில் தாவா சொத்து குறித்து குறிப்புகள் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். கோவில், மற்றும் கோவிலை சார்ந்த இடங்களுக்கும் பஞ்சாயத்தில் வரிவிலக்கு உள்ளது என்றால் சரிதான். கோவிலில் உள்ள இடங்களில் குடியிருப்பவர்கள் மின்சார இணைப்பு பெற வேண்டும் என்றால் எங்களிடமிருந்து தடையில்லா சான்றிதழ் பெற வேண்டும் என்றால் சரிதான். வாதியோ அல்லது வாதிக்கு முன்னர் தாவா சொத்தில் இருந்தவர்களுக்கோ அது போன்ற தடையில்லா சான்றிதழ் எதுவும் வழங்கியுள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு வாதியின் பெயரிலேயே சொத்து வரி, மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு ஆகியவை பெற்று வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். சுவாதீனத்திற்கு வாங்கியுள்ளார்கள். அவ்வாறு வாதி கோவில் சொத்திற்கு தங்கள் பெயரில் இணைப்புகள் பெற்றதை ஆட்சேபித்துள்ளோமா என்றால் இல்லை. கோவிலில் ஒவ்வொரு சொத்து குறித்து மொத்தமாக ஒரு பதிவேட்டிலும், ஒவ்வொரு சொத்திற்கும் ஒரு பதிவேடும்

பராமரிப்போம் என்றால் சரியல்ல, மொத்தமாக ஒரு பதிவேடுதான் பராமரிப்போம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 28 பழைய Settlement Register ல் தானிய களஞ்சியம், முசௌரி மற்றும் கணக்குச் சாவடி என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பாக அவை கோவிலுக்கு சொந்தமானது என காட்டப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் கோவிலுடைய உரிமையை பாதிப்பது போல ஒரு வில்லங்கம் இருப்பதாக எங்களுக்கு எப்போது முதல் முறையாக தெரிய வந்தது என்றால் எப்போது தெரிய வந்தது என்று எனக்கு தெரியாது. வெங்கடாச்சலம் ஐயரை தெரியுமா என்றால் தெரியாது. இந்த தாவா சொத்தின் ஆவணங்களை பார்த்த பிறகு வெங்கடாச்சலம் ஐயர் என்ற ஒரு நபரை தெரிந்து கொண்டேனா என்றால் ஆளை தெரியாது, ஆவணங்களில் தெரிந்து கொண்டேன். எங்களிடம் உள்ள ஆவணங்களில் எந்த ஆவணங்களில் வெங்கடாச்சலம் ஐயர் பற்றி குறிப்பு உள்ளது என்றால் எந்த ஆவணத்திலும் இல்லை. கோவிலுக்கு சொந்தமான இடத்தை வேறு ஒரு மூன்றாம் நபருக்கு கொடுப்பது என்றால் முறையாக கோவில் அறங்காவலர் மூலமாக தீர்மானம் போட்டுதான் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். அதுபோல தீர்மானம் மூலமாக வெங்கடாச்சலம் ஐயருக்கு கொடுத்ததாக எங்கள் ஆவணங்களில் எந்த குறிப்பும் உள்ளதா என்றால் இல்லை. வாய்மொழியாகதான் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வாய்மொழியாக கொடுக்கப்பட்டதாக எங்கள் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எந்த அடிப்படையில் வெங்கடாச்சலம் ஐயருக்கு அவ்வாறு வாய்மொழியாக கொடுக்கப்பட்டதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன்

என்றால் நான் கேள்விபட்டதை வைத்து சொல்லியுள்ளேன். வெங்கடாச்சலம் ஐயர் தாவா சொத்தில் எந்த வருடம் வேதபாடசாலை தொடங்கினார் என்று சொல்ல முடியுமா என்றால் 1970 ல் தொடங்கினார். 1970 ல் கோவில் சொத்தில் வெங்கடாச்சலம் ஐயர் வேதபாடசாலை நடத்தினார் என்ற விவரம் எதாவது எங்கள் கோவில் பதிவேடுகளில் குறிப்புகள் உள்ளதா என்றால் குறிப்புகள் இல்லை. பிறர் சொல்லி கேட்டுள்ளேன். அவ்வாறு ஒரு சொத்தை மூன்றாம் நபருக்கு கொடுக்கும்போது அந்த சொத்தை தணிக்கை செய்து அதற்குடைய மதிப்பை நிர்ணயித்து, ஏதாவது பிரதிபலனுக்கோ அல்லது பிரதிபலன் இல்லாமலோ கொடுப்பதா இல்லையா என்று முடிவு எடுக்கும் முறை உள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு தாவா சொத்தை வெங்கடாச்சலம் ஐயருக்கு வேதங்கள் சொல்லி கொடுப்பதற்காக கொடுத்ததாக நான் சொல்லும் சமயத்தில் மதிப்பீடு செய்யப்பட்டதாக எந்த குறிப்பும் உள்ளதா என்றால் இல்லை. எங்களுடைய பதிலுரையில் வெங்கடாச்சலம் ஐயர், மூன்றாம் நபர்களுடன் சேர்ந்து தாவா சொத்தை அபகரிக்க பொய்யான ஆவணங்களை உருவாக்கியதாக கூறியுள்ளோம் என்றால் சரிதான். அந்த மூன்றாம் நபர்கள் யார் என்று சொல்ல முடியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை, ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும். அந்த நபர்களை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விஸ்வ ஹிந்து வித்யா கேந்திராவை பற்றி தெரியுமா என்றால் வழக்கு போட்டுள்ளார்கள், அவ்வளவு தான் தெரியும். மகரிஷி மகேஷ் யோகி என்பவரை பற்றி தெரியுமா என்றால் கேள்விப்பட்டுள்ளேன். தாவா சொத்து வெங்கடாச்சலம் ஐயரால் மகரிஷி மகேஷ்

யோகி நடத்தி வந்த மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அண்ட் லேர்னிங் என்ற நிறுவனத்திற்கு வா.சா.ஆ. 7 மூலம் விற்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரிதான். அது ஒரு போலி ஆவணம். மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அண்ட் லேர்னிங் தாவா சொத்தை வாங்குவதற்கு முன்னர் வெங்கடாச்சலம் ஐயர் தாவா சொத்தை என்னவாக பயன்படுத்தினார் என்றால் வேதங்கள் சொல்லி கொடுக்க பயன்படுத்தினார். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் வெங்கடாச்சலம் ஐயர் அந்த சொத்தில் பேலஸ் லாட்ஜ் என்ற லாட்ஜ்ஜை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. அந்த இடத்தை விலைக்கு வாங்கி மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அண்ட் லேர்னிங் தான் வேதபாடசாலை தொடங்கினார்கள் என்றால் சரியல்ல. 1972 ல் ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ. 5 ஆவணத்தில் வா.சா.ஆ. 1, 2, 3 மற்றும் 4 ஆவணங்கள் குறித்தான குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். எங்களுடைய கூற்றுப்படி வெங்கடாச்சலம் ஐயர் தாவா சொத்திற்கான ஆவணங்களை மோசடியாக தயார் செய்திருந்தால் எந்த ஆண்டு செய்திருக்க வேண்டும் என்றால் 1970 க்கு பிறகு செய்திருக்க வேண்டும். கேரள அரசாங்க முத்தரையோடு உள்ள வா.சா.ஆ. 1, 2 மற்றும் 3 ஆவணங்களின் உண்மைதன்மை தெரிந்து கொள்வதற்காக அந்த ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ள அலுவலங்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ள முயற்சி செய்தோமா என்றால் இல்லை. இந்த ஆவணங்கள் எல்லாம் 2002 ஆம் ஆண்டு அசல் வழக்கு எண். 537/2002 ல் வாதி எங்கள் துறைக்கு

கொடுத்துள்ளது என்றாலும் அதற்கு பிறகு இந்த ஆவணங்களின் உண்மை தன்மை தெரிந்து கொள்வதற்காக எந்த நடவடிக்கையும் எடுத்துள்ளோமா என்றால் அந்த ஆவணங்களில் உள்ள சங்கதிகளிலேயே அவை பதிவு செய்யப்படவில்லை என்று தெரிய வருகிறது. அதனால் வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வெங்கடாச்சல ஐயருக்கு தாவா சொத்து சுவாதீனம் போகும்போது தாவா சொத்து என்னவாக இருந்தது என்றால் விறகுபுரை மற்றும் கோவில் தானிய களஞ்சியமாக இருந்தது. வா.சா.ஆ. 11 ல் கோவில் நிர்வாகம் வெங்கடாச்சலம் ஐயருக்கு அனுமதி கொடுத்ததாகவோ அல்லது அதை ரத்து செய்ததாகவோ எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். ஆனால் அனுபவத்தில் வைத்திருந்த சொத்தை திருக்கோவிலுக்கு ஏற்பிக்கும்படி சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 11 அறிவிப்பு கொடுத்தபோது வெங்கடாச்சலம் ஐயருக்கு வேதங்கள் கற்று கொடுப்பதற்காக தாவா சொத்தை பயன்படுத்த அனுமதி கொடுத்ததாக எங்கள் துறையின் நிலைப்பாடு கிடையாது என்றால் சரியல்ல. தற்போது வாதியால் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் எந்த ஆவணங்களின் அசல் எங்களிடம் உள்ளது என்றால் தற்போது என்னால் சொல்ல முடியாது. அந்த ஆவணங்கள் அசலாகவோ அல்லது நகலாகவோ எங்களிடம் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 16 உயர்நீதிமன்ற உத்தரவு படி வாதிகள், இரண்டாம் பிரதிவாதிகளிடம் அசல் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்திருந்தால் அவற்றை வாதியிடம் கொடுத்துவிடுமாறு கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த உத்தரவின் அடிப்படையில் வாதியிடமிருந்து அசல் ஆவணங்களை திருப்பி கொடுக்குமாறு

எங்களுக்கு கடிதம் வந்ததா என்றால் வந்தது. அதை திருப்பி கொடுக்காததற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் உண்டா என்றால் ஆணையர் முன்பு வழக்கு இருந்ததால் கொடுக்கவில்லை. அதன்பிறகு இந்த நீதிமன்றத்தில் வாதி இடைக்கால மனு தாக்கல் செய்து அந்த ஆவணங்களை கேட்டபோது கூட நாங்கள் அசல் ஆவணங்களை தரவில்லை என்றாலும் நகல் எடுத்துதான் தந்துள்ளோம் என்றாலும் சரிதான். அவ்வாறு அசல் ஆவணங்களை கொடுக்காமல் நகல் எடுத்து தந்ததற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் உண்டா என்றால் ஆணையர் முன்பு R.P. 26/2022 நிலுவையில் இருப்பதால் கொடுக்கவில்லை. வா.சா.ஆ. 28 பழைய Settlement Register ல் தாவா சொத்துக்களை குறிக்கும் மூன்று சர்வே எண்களுக்கும், புறம்போக்கு என்றுதான் உள்ளது என்றால் சரிதான். அதே வா.சா.ஆ. 28 ஆவணத்தில் சர்வே எண். 1/16 க்கு கோவில் புறம்போக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் பழைய Settlement ஆவணங்களில் கோவில் சொத்தை கோவில் புறம்போக்கு என்றும் அரசு சொத்தை புறம்போக்கு என்றும் குறிப்பிடுவார்கள் என்றால் சரியல்ல. ராஜாக்கள் காலத்தில் கோவில் அரசாங்கத்தின் நேரடி கட்டுப்பாட்டில் இருந்ததால் புறம்போக்கு என இந்த சொத்துக்கள் குறித்து குறிப்பிட்டுள்ளார்கள்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.